தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆடி 12, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 ஜூலை 27, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கின்
அதுநோக்கி வாழ்வார் பலர்.

அனைத்து மக்களும் சமம் எனினும், அவரவர்க்குரிய ஆற்றலுக்கேற்ப அவர்களைப் பயன்படுத்திக் கொண்டால், அந்த அரசை அனைவரும் அரணாகச் சூழ்ந்து நிற்பர்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா எண் 21, திருமதி எஸ். ராஜம்மாள், மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.*

21—

பக்கிள் ஓடை சீரமைப்பு

***8638–திருமதி எஸ். ராஜம்மாள்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி நகர மக்களுக்கு மிகப் பெரிய சுகாதாரச் சீர்கேட்டை உருவாக்கும் கழிவுநீரைக் கடலுக்குக் கொண்டு செல்ல பக்கிள் ஓடை சீரமைப்புத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடியில் நகராட்சியின் பொறுப்பில் உள்ள பக்கிள் ஓடையின் நீளம் 9100 மீட்டர் ஆகும். இதில் 5200 மீட்டர் முதல் 9100 மீட்டர் வரை ரூ.30 இலட்சம் செலவில் தூர் வாரி மேம்படுத்தப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திருமதி எஸ். ராஜம்மாள்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, எனது வினாவைத் தொடர்கிறேன். தூத்துக்குடி நகரில் 9100 மீட்டர் நீளமுள்ள பக்கிள் ஓடையின் ஒரு பகுதி தூர் வாரினாலும், மலேரியா போன்ற சுகாதாரக் கேடுகளைப் பரப்பும் நோய்கள் பரவ வாய்ப்புள்ளது. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் பக்கிள் ஓடையின் இரு கரைகளையும் பலப்படுத்திச் சாலைகளை அமைப்பதற்கு ரூ.10 கோடி உலக வங்கி அனுமதி பெற்றது. ஆனால், பின்னர் வந்த தி.மு.க. அரசு இந்தத் திட்டத்தைக் கிடப்பில் போட்டுவிட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் இந்தத் திட்டத்தை மீண்டும் கொண்டு வந்து பக்கிள் ஓடையின் இரு கரைகளையும் பலப்படுத்த வேண்டுமென்றும், போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக பக்கிள் ஓடையின் கரைகளில் பாலங்கள் கட்டப்பட்டு சாலைகள் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இதுகுறித்து அம்மா அவர்களின் அனுமதியோடு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடியில் நகராட்சியின் பொறுப்பில் பக்கிள் ஓடை உள்ளது. இது பாசனக் கால்வாய் அல்ல. கழிவு நீரைக் கடலுக்குள் கொண்டு செல்லும் ஓடை ஆகும். இதன் மொத்த நீளம் 9100 மீட்டர்*

2004 ஜூலை 27]

ஆகும். 13–11–2000 நாளிட்ட பொதுப் பணித் துறை அரசாணை எண் 189—ல் மொத்தம், ரூ.30 இலட்சங்களுக்கு 5200 மீட்டர் முதல் 9100 மீட்டர் வரை தூர் வாரி மேம்படுத்தும் பணிக்கு பொதுப் பணித் துறைக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதால் பொதுப் பணித் துறையின் மூலம் செயல்படுத்தப்பட்டு பணிகள் நிறைவேற்றப்பட்டன. இந்த ஓடையை முழு நீள அளவுக்குத் தூர்வாரி சீரமைக்க தோராயமாக ரூ.10 கோடிக்கு மேல் ஆகுமென்றும் இந்த ஓடை தூத்துக்குடி நகராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ளதால் தூர் வாரி மேம்படுத்த நகராட்சி மூலம் ரூ.10 கோடி நிதி பெற்றுப் பொதுப் பணித் துறைக்கு வழங்கினால் பொதுப் பணித் துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எஸ். ராஜம்மாள்.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரைச் சுற்றிலும் அதிகமான தொழிற்சாலைகள் உள்ளன. தற்போது கழிவு நீரை தருவைக் குளத்தின் அருகில் உள்ள இடத்தில் சேமித்து வைத்தாலும் அந்த நடவடிக்கைகளினால் நிரந்தரத் தீர்வுகள் காணவே இல்லை. எனவே, பக்கிள் ஓடைக் கழிவு நீரைக் குழாய்கள் மூலம் கடலுக்குக் கொண்டு செல்ல வேண்டுமென்றும் இதனால் கடல் வாழ் உயிரினங்கள் இறக்க நேரிடாது என்றும் மீன் வளத் துறை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இந்தத் திட்டத்தை அங்குள்ள தொழிற்சாலைகளை அணுகி அவர்கள் வாயிலாக செய்ய அரசு முன்வருமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானதுதான். அது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையினுடைய கட்டுப்பாட்டில் வருவதால் அவர்கள் அந்த வேலையைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எஸ். ராஜம்மாள். நீங்கள் விடமாட்டீர்கள்போல் இருக்கிறது.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே அதிகமான தொழிற்சாலைகள் உள்ளன. அந்தத் தொழிற்சாலைகள் மூலமாக சுற்றுப்புறச்சூழல் மாசுபட்டு

பொதுமக்களுக்கு அதிக சுகாதாரக் கேட்டை விளைவித்து வருகிறது. இலாபகரமாக இயங்கும் தொழிற்சாலைகள் மூலமாக இதைச் செய்ய வேண்டுமென்று அரசு அனுமதித்தால் நன்றாக இருக்கும். இதைச் செய்து முடிக்க வாய்ப்புள்ள தொழிற்சாலைகள்தான் அவை. அதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 22, திரு. வீ. சந்திரன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

22—

திறந்தவெளி சிறைச்சாலை

***23953–திரு. வீ. சந்திரன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிவகங்கை வட்டம், அரசனி—முத்துப்பட்டி கிராமத்தில் ஏற்கெனவே அரசு கையகப்படுத்தியுள்ள இடத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைத்திட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சிவகங்கை வட்டம், அரசனி—முத்துப்பட்டி கிராமத்தில் திறந்தவெளி சிறைச்சாலை அமைப்பது தொடர்பாகக் கருத்துரு தற்போது அரசிடம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—05

திரு. வீ. சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சிவகங்கை தொகுதியில் சிவகங்கையில் நீண்ட நாட்களாக வட்டாட்சியர் அலுவலகக் கட்டடத்தில் இரண்டு சிறைச்சாலைகள்தான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS